# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2094/38 - 2018 ඔක්තෝබර් මස 26 වැනි සිකුරාදා - 2018.10.26

*2094/38 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண சபை நடவடிக்கை ஒழுங்கு விதிகளின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் செய்யப்படும் அறிவித்தல்*

*மேல் மாகாண சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் விசேட ஏற்பாடுகள் நியதிச் சட்டம் எனும் பெயருடைய கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் நியதிச் சட்ட வரைபிற்கான மேல் மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் 2018.03.20 ஆந் திகதியிட்ட அமைச்சரவை தீர்மான இலக்கம் VI/113/03-2018-02(i) இன் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் அது மேல் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக என்னால் முன்மொழியப்படவுள்ளதெனவும் பொது மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக இத்தால் அறிவிக்கின்றேன்.*

இசுர தேவப்பிரிய,<br>
முதல் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பொறியியல் சேவை,<br>
சட்டம் மற்றும் சமாதானம், உள்ளூராட்சி மற்றும் நிர்வாகம்,<br>
பொருளாதார ஊக்குவிப்பு, மின்சாரம் மற்றும்<br>
எரிசக்தி, சக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வடிகாலமைப்பு<br>
மற்றும் நீர் விநியோகம் மற்றும் சுற்றுலா அலுவல்கள்<br>
தொடர்பான அமைச்சர்,<br>
மேல் மாகாணம்.

*2018, ஒற்றோபர் 10.*

***2018 ஆம் ஆண்டின் ... ... ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச்சபை நியதிச்சட்டம்***

*மேல் மாகாணத்தினுள் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழில் திறனினை உயர்த்துதல் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல், சுற்றுலாச் சேவைகளின் தரத்தினை முன்னேற்றுதல், சுற்றுலா ஈர்ப்புத் தலங்களை அண்டி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மாகாண தேசிய மற்றும் வெளிநாட்டு சுற்றுலா நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காகவும் மேல் மாகாண சுற்றுலாச் சபையினைக் கூட்டிணைப்பதற்காகவும் 1994 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டத்தினை செயலற்றதாக்குவதற்காகவும் அது தொடர்பான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குதற்காகவுமான நியதிச் சட்டமாகும்.*


1A - PG 4298 — 08 (2018/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு இயற்றப்படுகிறது :

குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டமானது 2018 ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டம் என அறியப்படுவதோடு மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து செயற்படும்.

பகுதி I

**மேல் மாகாண சுற்றுலாச் சபையினை நிறுவுதல்**

சுற்றுலாச் சபையினை நிறுவுதல்.

2. (1) இங்கு இதன் பின் "சபை" எனக் குறிப்பிடப்படும் மேல் மாகாண சுற்றுலாச் சபை இத்தால் நிறுவப்படுகிறது.

(2) சபை (1) உப பிரிவின்படி குறித்த பெயரின் கீழ் நிலையான இருப்பு மற்றும் பொதுவான முத்திரை உடைய, வழக்குத் தொடுக்கக்கூடிய மற்றும் தொடுக்கப்படக்கூடிய கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.

பகுதி II

**மேல் மாகாண சுற்றுலாச் சபையின் நோக்கம் மற்றும் அதிகாரம்**

சபையின் நோக்கம்.

3. சபையின் நோக்கம் கீழ்வருமாறு :

(1) மாகாணத்தினுள் முறைசார் மற்றும் முறைசாரா சுற்றுலாச் சேவைகளில் ஈடுபட்டுள்ளோரது மற்றும் சுற்றுலாத் துறையில் தொழிலுக்காகச் செல்வோரது தொழிற் திறனினை உயர்த்துதல், அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல்.

(2) மாகாணத்தினுள் முறைசார் மற்றும் முறைசாரா சுற்றுலாச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களது சேவைகளின் தரத்தினை முன்னேற்றுதல்.

(3) மாகாணத்தினுள் இனங்காணப்படும் சுற்றுலா ஈர்ப்புத் தலங்களை அண்டி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(4) உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக மாகாணத்தினுள் பல்வகையான சுற்றுலா அனுபவங்களை அனுபவிப்பதற்கான வசதிகளை விருத்தி செய்தல்.

(5) மாகாணத்தினுள் இனங்காணப்படும் சுற்றுலா ஈர்ப்புத் தலங்கள் பற்றி உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சாரம்.

(6) மாகாணத்தினுள் சுற்றுலாத்துறையில் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துதல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

(7) மாகாணத்தின் சுற்றுலா நடவடிக்கையின் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சாரத்திற்காக மாகாணங்களுக்கிடையேயான ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

சபையின் அதிகாரங்கள்.

4. சபையின் அதிகாரங்கள் கீழ்வருமாறு :

(1) ஏதாவது அசையும் அல்லது அசையாச் சொத்தினைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது கையகப்படுத்தல், பிடிப்பில் வைத்திருத்தல் மற்றும் பொறுப்பாக்கப்பட்ட சாதனப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்தல், குத்தகைக்கு விடல் அல்லது ஈடுவைத்தல்.

(2) சுற்றுலா நடவடிக்கை பயிற்சிக்கு மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய சூழலினை உருவாக்குதல் மற்றும் தொடராக பேணிச் செல்லல்.

(3) சபை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்பினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அளவிற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்த உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.

(4) நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைத்தல், வழிநடாத்துதல் மற்றும் பயிற்சி பெற்றோரை நெறிப்படுத்துதல்.

(5) சுற்றுலாச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக உபாயங்களைத் தாபித்தல்.

(6) சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்காக கட்டணம் அல்லது கொடுப்பனவைத் தீர்மானித்தல் மற்றும் அறவிடல்.

(7) சபையின் பணிக்குழுவினை முகாமை செய்வதற்குத் தேவையான செயற்படி முறைகளைத் தீர்மானித்தல்.

(8) சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான நன்கொடைகளைக் கையேற்றல் மற்றும் பிடிப்பில் வைத்திருத்தல்.

(9) சுற்றுலாப் பயணங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அது தொடர்பான முகவர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயற்படல் மற்றும் அந்நடவடிக்கைகளில் ஈடுபடல்.

(10) இந்நியதிச் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்குட்பட்டு மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு விடயத்தினையும் அடைந்து கொள்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களும்.

## பகுதி III

### பணிப்பாளர் சபை

5. சபையின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வது பணிப்பாளர் சபையாகும். பணிப்பாளர் சபையானது கீழுள்ள உறுப்பினர்களைக் கொண்டது : *சபையினது பணிப்பாளர் சபை.*

(1) பதவி வழி உறுப்பினர்கள் : *பதவி வழி உறுப்பினர்கள்.*

(அ) விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர்.

(இ) பிரதிப் பிரதான செயலாளர் (நிதி).

(ஈ) சுற்றுலா விடயப் பொறுப்பு மத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் பிரதிநிதி ; மற்றும்

(2) அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று பிரதிநிதிகள், அதில் குறைந்தது ஒருவராவது சுற்றுலாத்துறை தொடர்பான அனுபவம் மற்றும் அறிவு உடையவராயிருப்பதுடன் அதில் ஒருவர் சபையின் தலைவராக நியமிக்கப்படல் அவசியம். *நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.*

(3) மேலே (1) மற்றும் (2) உப பிரிவுகளில் குறிப்பிட்ட நியமனங்கள் தொடர்பான நியமனக் கடிதம் அமைச்சரினால் வழங்கப்படல் அவசியம்.

உறுப்பினராவதற்கு தகுதியற்றோர்.

6. யாராகிலுமொருவர்–

(அ) பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் அங்கத்தவர்.

(ஆ) இலங்கைப் பிரசை அல்லாதவர்.

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது ஒரு நாட்டின் ஏதாவதொரு சட்டத்தின் கீழ் புத்திசுவாதீனமற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பின் அல்லது அறிவிக்கப்பட்டிருப்பின்.

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதாவது ஒரு நாட்டின் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு உட்பட்டிருந்தால்.

(உ) நீதிமன்றமொன்றினால் கடனிறுக்க வகையற்றவராக அறிவிக்கப்பட்டிருப்போர்

ஆகியோர் சபை அங்கத்தவர்களாக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் அங்கத்தவர்களாயிருப்பதற்குத் தகுதியற்றவர்களாவர்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்.

7. (1) சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும், நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும். மேலும், 9(1) ஆம் உப பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலே அன்றி மீண்டும் நியமனம் பெறுவதற்குத் தகுதியற்றவராக மாட்டார்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது பதவி விலகும் சந்தர்ப்பத்தில் மீண்டும் நியமிக்கப்படும் உறுப்பினர் எஞ்சியிருக்கும் காலத்திற்கு மாத்திரமே பதவி வகித்தல் அவசியம்.

சபைத் தலைவரின் பதவிக்காலம்.

8. (1) 9(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு தலைவரின் பதவிக்காலம் சபையில் அவரது உறுப்புரிமைக் காலமாகும்.

(2) நோய் அல்லது வேறு இயலாமையினால் அல்லது வெளிநாடு சென்றிருத்தல் காரணமாக அல்லது தமது பதவிக்காலத்தினை நிறைவேற்றுவதற்கு தலைவருக்கு தற்காலிகமாக முடியாதிருப்பின் தலைவர் பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரினால் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவரை நியமிக்க முடியும்.

(3) அமைச்சர் தலைவரின் செயற்பாடுகளில் திருப்தியடையாதவிடத்து தலைவரது நியமனத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

(4) சபையின் அனைத்துக் கூட்டங்களிலும் தலைவர் தலைமையேற்க வேண்டும். சபையின் ஏதாவது கூட்டத்திற்குத் தலைவர் சமுகமளிக்காவிடின் சமுகமளித்திருக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவர் தலைமையேற்பதற்காகத் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

உறுப்புரிமையிலிருந்து நீக்கல்.

9. (1) அமைச்சர் ஏதாவதொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரின் செயற்பாடுகளில் திருப்தியடையாதவிடத்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் நியமனத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

(2) பதவி விலகுவதாக அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றை அமைச்சர் ஏற்றுக்கொண்டதாக அறிவித்ததும் சபை அங்கத்தவரொருவருக்கு, உறுப்பினராக அல்லது தலைவராக தமது பதவியிலிருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவி விலக முடியும்.

சபை நடைமுறைகள்.

10. (1) பணிப்பாளர் சபையின் எந்தவொரு கூட்டத்திற்கும் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்கள் இருத்தல் அவசியம்.

(2) பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களில் ஏதாவது வெற்றிடம் காணப்படல் அல்லது அதன் உறுப்பினர்களை நியமிப்பது சிக்கலாயிருத்தல் போன்ற காரணங்களால் சபையின் ஏதாவது நடவடிக்கை அல்லது செயற்பாடுகள் செல்லுபடியற்றதாக ஆகாதிருத்தல் அவசியம்.

(3) பணிப்பாளர் சபையின் கூட்டம் ஆகக்குறைந்தது மாதத்திற்கொரு முறையாவது நடைபெறல் வேண்டும். பணிப்பாளர் சபையின் கூட்டத்தினை நடாத்துதல் தொடர்பான செயற்படிமுறைகள் இந்நியதிச் சட்டத்தின் தயாரிக்கப்படும் விதிகள் மூலம் தீர்மானிக்கப்படும் முறைப்படி இருத்தல் அவசியம்.

(4) பணிப்பாளர் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அல்லது உறுப்பினர் ஒருவருக்கோ மாகாண திறைசேரியினால் வெளியிடப்படும் சுற்றுநிருபம், ஆலோசனை மற்றும் ஏற்பாடுகளுக்கமைவாக ஊதியம், கொடுப்பனவு மற்றும் வேறு செலவுகள் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட முடியும்.

(5) சபை நடவடிக்கைகளை வினைத்திறனாக நிர்வகிப்பதற்காக தேவையான சுய அதிகாரங்கள் மற்றும் பணிகளை பணிப்பாளர் சபை தலைவருக்கு, பொது முகாமையாளருக்கு அல்லது சபை ஊழியர் ஒருவருக்கு ஒப்படைக்க முடியும்.

(6) ஏதாவதொரு விடயம் தொடர்பாக பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் வாக்குகள் சமமாகப் பிரியுமாயின் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் உறுப்பினருக்கு தேர்வு வாக்கு உரித்தாதல் வேண்டும்.

(7) சபை ஊழியர்களில் பொருத்தமான அலுவலரைப் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்க முடியும்.

11. (1) சபை முத்திரை பணிப்பாளரின் பொறுப்பில் இருத்தல் அவசியம். சபை முத்திரை.

(2) சபை முத்திரை பணிப்பாளர் சபை தீர்மானிக்கும் முறைப்படி இருத்தல் அவசியம்.

(3) தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் முன்னிலையில் அன்றி எந்தவொரு சாதனப்பத்திரத்திலும், ஆவணத்திலும், ஒப்பந்தத்திலும் சபை முத்திரையினை இடக்கூடாதென்பதுடன், தான் சமுகமளித்ததாக அவ்விருவரும் அச்சாதனப்பத்திரத்தில், ஆவணத்தில் அல்லது ஒப்பந்தத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

(4) சபை முத்திரையிடும் ஆவணங்கள் தொடர்பான ஒரு பதிவினை சபை பேணிச்செல்லல் அவசியம்.

12. சபை நோக்கங்களை நிறைவேற்றுதல் மற்றும் அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சரினால் சபைக்கு எழுத்துமூல உத்தரவுகளை வழங்க முடியும். அவ்வுத்தரவை பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்தல் வேண்டும். சபை தொடர்பான அமைச்சரின் அதிகாரங்கள்.

பகுதி IV

**சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிக்குழுவினர்**

13. (1) சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இதில் பொது முகாமையாளர் என அறியப்படும், அதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப சேர்க்கப்பட்ட முழுநேர அலுவலர் ஒருவர் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படல் வேண்டும். சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர்.

எவ்வாறெனினும், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை சபை பொது முகாமையாளர் பதவிக்கு செயற்பாட்டில் இல்லாதவரை பொது முகாமையாளராக பொருத்தமான ஒருவர் பிரதான செயலாளரின் இணக்கப்பாட்டின் மீது விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

(2) சபை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், சபை அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் பணிகளை ஒழுங்கமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் சபை ஊழியர்களின் நிர்வாகம், பணிப்பாளர் சபையின் பொதுவான ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு பொது முகாமையாளரிடம் ஒப்படைக்கப்படும்.

*சபையின் ஏனைய பணிக்குழு.*

(3) சுய காரியங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியம் என சபை கருதும் ஏனைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தலைவரினால் நியமனம் செய்யப்பட முடியும்.

(4) மேல் மாகாண அரச சேவையிலுள்ள ஏதாவது அலுவலர் பணிப்பாளர் சபையின் கோரிக்கைக்கு ஏற்ப அவ்வலுவலர் மற்றும் அவ்வலுவலர் சேவையாற்றும் மாகாண விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் விருப்பத்துடன் ஆளுநரின் அங்கீகாரத்தின்படி பணிப்பாளர் சபை தீர்மானிக்கும் காலத்திற்கு சபையின் பணிக்குழுவிற்கு தற்காலிகமாக நியமனம் செய்யப்பட முடியும்.

## பகுதி V

### சபை நிதியம்

*சபை நிதியம்.*

14. சபை பெயரில் ஒரு நிதியம் இருத்தல் அவசியம். அந்நிதியம்,

(அ) பிரதானமாக மாகாண சபையினால் சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டு சேகரிக்கப்படும் அனைத்து நிதி ;

(இ) கட்டணம் மற்றும் அறவீடு மூலம் சபையினால் ஏற்கப்படும் அனைத்து நிதி ;

(ஈ) இலங்கையிலிருந்து அல்லது அதற்கு வெளியிலிருந்து எந்தவொரு நன்கொடை, பரிசு அல்லது மானியம் அல்லது வேறு வழிகளில் கிடைக்கும் அனைத்து நிதி ;

(உ) சபையின் சொத்துக்கள், இடங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்களை விற்றல், வாடகைக்கு விடல், குத்தகைக்கு விடல் அல்லது அகற்றுதல் மூலம் கிடைக்கும் அனைத்து நிதி ;

(ஊ) ஏதாவது விசேட செயற்திட்டம் நிறைவேற்றுவதற்கு அல்லது ஏதாவது செயலினைச் செய்வதற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது உள்ளூராட்சித் தாபனங்களிலிருந்து அல்லது வேறும் தாபனங்களிலிருந்து கிடைக்கும் நிதி ;

(எ) சபையிடமுள்ள நிதியினை முதலீடு செய்வதன் மூலம் அல்லது வைப்பிலிடுவதன் மூலம் கிடைக்கும் இலாபம், தவணை அல்லது வேறு நிதி ;

(ஏ) வேறு ஏதாவது சட்ட ரீதியான மூலங்களிலிருந்து தாபனத்திற்குக் கிடைக்கும் நிதி வரவு வைக்கப்படல் வேண்டும்.

*நிதிய கொடுப்பனவுகள்.*

15. நிதியத்திலிருந்து கீழுள்ள விடயங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

(1) சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கான படிகள் ;

(2) சபை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் வேறு கொடுப்பனவுகள் ;

(3) சபைக்கு சேவை வழங்குவோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் படிகள் ;

(4) சபையினால், இந்நியதிச் சட்டத்தின் கீழான அதிகாரம், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மற்றும் நிறைவேற்றுவதற்காக ஏற்க வேண்டிய அனைத்துச் செலவுகளும்.

16. சபையின் நிதி ஆண்டு நாட்காட்டி ஆண்டாகும். நிதி ஆண்டு.

17. சபை வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாகவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாகவும் கணக்குகள் மற்றும் ஏடுகள் பேணப்படல் வேண்டும். சபைக் கணக்குகளைப் பேணுதல் இந்நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஒழுங்கு விதிகள் மூலம் தீர்மானிக்கப்படும் முறைப்படி அமைதல் வேண்டும். சபைக் கணக்கு.

18. சபை நிதியத்தின் நிதிக் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரிமை தொடர்புடையதாகும்.

பகுதி VI

**பொது விடயங்கள்**

19. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக நியதிச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், வலிதுடையதாக்கல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான அனைத்து விடயங்கள் அல்லது ஏதாவதொரு விடயம் தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் அதிகாரங்களுக்கு பாதிப்பில்லாமல் அமைச்சர் ஒழுங்குவிதிகளை உருவாக்க முடியும்.

(2) இப்பிரிவின் கீழ் அமைச்சர் உருவாக்கும் அனைத்து ஒழுங்கு விதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினம் அல்லது அவ்வொழுங்கு விதியில் குறிப்பிடப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

(3) அமைச்சர் உருவாக்கும் அனைத்து ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின் மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மாகாண சபை அங்கீகரிக்காத ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகரிக்காதிருப்பதற்கு முடிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியற்றதாகக் கருதப்படும். எனினும் அதன்கீழ் முன்பு மேற்கொள்ளப்பட்ட எதற்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படலாகாது.

பகுதி VII

**இடைக்கால ஏற்பாடுகள்**

20. (1) இந்நியதிச் சட்டம் மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து மேல் மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டம் இத்தால் செயலற்றதாக்கப்படுகிறது. இடைக்கால ஏற்பாடுகள்.

(2) எவ்வாறெனினும், 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் மாகாண சுற்றுலாச் சபையிடமிருந்த–

(அ) அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ;

(ஆ) அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ;

(இ) அனைத்துப் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் சபையிடமிருந்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்பு மற்றும் கடப்பாடு ஆகக் கருதப்படல் அவசியம்.

(3) 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விடயங்களாகக் கருதப்படல் அவசியம்.

(4) 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டத்தின் கீழ் சபையினால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளாகக் கருதப்படல் அவசியம்.

(5) மேலும், 1994 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் மாகாண சுற்றுலாச் சபையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இச்சபையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களாகக் கருதப்படல் அவசியம்.

*சபை அலுவலர்கள் குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் அரச ஊழியர்களாகக் கருதப்படல் வேண்டும்.*

21. குற்றவியல் சட்டக் கோவையின் பொருள்கோடல் மற்றும் விடயங்களுக்காக சபையின் அனைத்து உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களும் அரச ஊழியர்களாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் இலஞ்ச சட்டத்தின் தொழிற்பாடுகளுக்காக அதிகார சபை அட்டவணைப்படுத்தப்பட்ட தாபனமாகக் கருதப்படல் வேண்டும்.

*பொருள் கொள்ளல்.*

22. பதங்கள் தொடர்பாக வேறு பொருள்கொள்ளல் தேவைப்பட்டாலன்றி, இந்நியதிச் சட்டத்தில்–

"மாகாணம்" என்பது, மேல் மாகாணம் எனவும்,

"மாகாண சபை" என்பது, மேல் மாகாண சபை எனவும்,

"அமைச்சர்" என்பது, மேல் மாகாண அமைச்சரவையின் சுற்றுலா விடயப் பொறுப்பு அமைச்சர் எனவும்,

"பிரதான செயலாளர்" என்பது, மேல் மாகாண பிரதான செயலாளர் எனவும் கருதப்படும்.

*முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறும்.*

23. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும்.

11-454

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.